ரூ. 3.81 கோடியில் 10 புதிய அரசு பஸ்கள்: முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 16–

ரூ. 3.81 கோடியில் 10 புதிய அரசு பஸ்களை முதவமைச்சர் ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் கோட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்துக்கு 2023, 2024ம் ஆண்டிற்கு 247 புறநகர் பஸ்கள் மற்றும் 64 நகர பஸ்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் பழைய பஸ்களுக்கு மாற்றாக இதுவரை 134 புறநகர் பஸ்கள் மற்றும் 12 நகர பஸ்கள் புதிதாக கூண்டு கட்டி தடத்தில் இயக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது இப்பகுதி மக்கள் பயனடையும் வகையில் ரூ.3 கோடியே 81 லட்சம் செலவில் 8 புறநகர் பஸ்கள் மற்றும் 2 புதிய மகளிர் விடியல் பயண நகர பஸ்கள் என மொத்தம் 10 புதிய பஸ்கள் வாங்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு கூட்ரோட்டில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய பஸ்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சசிகாந்த் செந்தில் எம்.பி, எம்.எல்.ஏக்கள் வி.ஜி.ராஜேந்திரன், இனிகோ இருதயராஜ், எஸ்.சந்திரன், தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளி கல்வித்துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் எஸ்.திவ்யதர்ஷினி, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் த.பிரபு சங்கர் முதலமைச்சரின் காலை உணவு திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் க.இளம்பகவத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காலை உணவு திட்டம் குறித்த பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கருத்துக்கு தமிழக அரசு பதில்

சென்னை, ஜூலை 16–

காலை உணவு திட்டம் குறித்த பாரதீய ஜனதா கட்சி மாநில தலைவர் அண்ணாமலையின் கருத்துக்கு தமிழக அரசு பதில் அளித்துள்ளது.

காமராஜர் பிறந்தநாளை ஒட்டி நேற்று சேலத்தில் அவரது திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செய்த பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம், 'காலை உணவு மட்டுமல்ல, மதிய உணவும் மாணவர்களுக்கு சத்தாக வழங்கவேண்டும். எனவே, பள்ளி மாணவர்களுக்கு வெறும் சாப்பாடு, இட்லி, தோசை என கொடுக்காமல், சிறுதானியங்கள், முட்டை உள்பட சத்தான உணவுகளை வழங்க வேண்டும். இதில் நிதி பற்றாக்குறை இருந்தாலும், நிதி உதவி செய்ய மத்திய அரசு தயாராக இருக்கிறது' என தெரிவித்தார்.

இந்நிலையில், அண்ணாமலையின் கருத்துக்கு தமிழக அரசின் தகவலை உறுதிப்படுத்தும் அமைப்பு தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு அரசு வழங்கும் காலை சிற்றுண்டியில் தோசை, இட்லி வழங்கப்படுவதில்லை. சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட உணவுகள் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கான மதிய உணவில் 5 நாட்களுமே முட்டை வழங்கப்படுகிறது. மேலும், மத்திய அரசு நிர்ணயித்த கலோரிகள், புரதத்தை விடவும் அதிகமாகவே தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளில் தினமும் காலை மற்றும் மதிய வேளையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு பட்டியல் விவரங்களையும், இந்த திட்டத்தின் மூலம் ஒரு குழந்தைக்கு எவ்வளவு கலோரி, புரதம், கொழுப்பு, இரும்பு, சுண்ணாம்பு சத்துகள் கூடுதலாக கிடைக்கிறது என்ற விவரங்களையும் புள்ளி விவரத்துடன் தமிழக அரசின் தகவல் உறுதிப்படுத்தும் அமைப்பு தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

பாலாற்றின் குறுக்கே ரூ.52½ கோடியில் புதிய அணை கட்டும் பணி: அமைச்சர் துரைமுருகன் அடிக்கல் நாட்டினார்

வேலூர், ஜூலை 16–

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு இறைவன் காடு பாலாற்றின் குறுக்கே ரூ.52½ கோடியில் அணை கட்டுவதற்கு அமச்சர் துரைமுருகன் அடிக்கல் நாட்டினார்.

அப்போது அவர் பேசியதாவது:

வேலூர் மாவட்டத்தில் பி.கே. புரம், வேலூர் மற்றும் சாத்தம்பாக்கம் ஆகிய இடங்களில் தடுப்பணைகளும், பொன்னை அணைக்கட்டு மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம் பூண்டி அணைக்கட்டு ஆகியவற்றில் பல்வேறு புனர் அமைப்பு பணிகளும் பல கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாலாற்றில் மட்டும் பல தடுப்பணை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது. இது மட்டும் இன்றி தாமிரபரணி போன்ற ஆறுகளின் குறுக்கே நீர்வளத் துறையின் சார்பில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகிறது. இந்த பகுதி விவசாயிகளுக்காக ரூ.100 கோடி மதிப்பில் மோர்தானா அணை இந்த மாவட்டத்தில் கட்டப்பட்டது. பாலாற்றில் நீரின் அளவை அதிகரிக்கும் வகையில் என்னுடைய எண்ணத்தில் ஒரு திட்டம் உள்ளது.

அதாவது தென்பெண்ணை ஆற்றில், கிருஷ்ணகிரி அணையில் இருந்து வரும் நீரானது சாத்தனூர் அணை வழியே வழிந்து கடலுக்கு சென்று விடுகிறது. இந்த நீரை தென்பண்ணை ஆற்றில் இருந்து பாரூர் நெடுங்கல் ஏரி வழியாக பாலாற்றுக்கு திருப்பி விட்டால் பாலாற்றில் எப்பொழுதும் தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். இந்த ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உள்ளது.

இதற்காக தமிழக முதல் அமைச்சரிடம் கலந்து ஆலோசித்து அடுத்து இரண்டு ஆண்டுக்குள் திட்டத்தை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நான் நீர்வளத்துறை அமைச்சராக இருந்த காலகட்டத்தில் மட்டும் தமிழ்நாட்டில் 49 அணைகள் கட்டி உள்ளேன். ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூரில் மோர்தானா, ராஜாதோப்பு ஆகிய இடங்களிலும் அணைகள் கட்டப்பட்டுள்ளது.

தற்போது இறைவன் காடு பகுதியில் கட்டப்படும் அணையானது 9 அடி உயரம், 655 மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும். அணை கட்டி முடிக்கப்பட்ட பிறகு இப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கான குடிநீர் மற்றும் விவசாயிகளுக்கான தண்ணீர் பிரச்சினை தீர்ந்து விடும்.

இந்த அணை மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு பாலாற்றின் இரு புறங்களிலும் உள்ள 12 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 12 உரை கிணறுகள், 626 கிணறுகள் மூலம் 1379.49 ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் கலெக்டர் சுப்புலெட்சுமி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், மேல் பாலாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் ரமேஷ், கோட்ட செயற்பொறியாளர் பிரபாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை இந்த மாதம் முதல் கூடுதலாக 1.48 லட்சம் பேருக்கு வழங்கப்படும்

சென்னை, ஜூலை 16–

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை இந்த மாதம் முதல் கூடுதலாக 1.48 லட்சம் பேருக்கு வழங்கப்படும் என அதிகாரிகள் கூறினர்.

கடந்த 2021–ம் ஆண்டு சட்டசபை தேர்தல் பிரச்சாரத்தின்போது குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ,1,000 உரிமைத்தொகை வழங்கப்படும் என்று தி.மு.க. அறிவித்தது. அதன்படி ஆட்சிக்கு வந்தவுடன் முதலமைச்சர் ஸ்டாலின், இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவோம் என்று அறிவித்தார். அதன்படி அவர், கடந்த ஆண்டு (2023) செப்டம்பர் மாதம் 15–ம் தேதி அண்ணா பிறந்த நாளன்று மகளிருக்கு உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்திற்கு கலைஞர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் எனவும் பெயரிடப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் முதலில் ஒரு கோடி பெண்களுக்கு உரிமைத்தொகை வழங்க திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனாலும் அரசு அறிவித்த விதிமுறைகளின்படி 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் பெண்கள் தேர்வு ஆனார்கள். எனவே முதலமைச்சர் ஸ்டாலின் இவர்கள் அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க உத்தரவிட்டார்.

மேலும், அவர் விடுபட்ட பெண்கள் மேல்முறையீடு செய்யவும், புதிதாக பெண்கள் இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்தார். அதன் தொடர்ச்சியாக பெண்கள் இந்த திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக சேர்க்கப்பட்டு வருகின்றனர். அதனால் இதன் எண்ணிக்கை 1 கோடியே 15 லட்சம் ஆனது. தொடர்ந்து விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதால், இப்போது அதில் புதிதாக 1 லட்சத்து 48 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு இந்த மாதத்தில் இருந்து உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் கூறினர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 2024–25ம் நிதியாண்டில் மொத்தம் ரூ,13 ஆயிரத்து 722 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மறைமலையடிகளாரின் 148வது பிறந்தநாளையொட்டி, பல்லாவரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அமைந்துள்ள திருவுருவசிலைக்கு அமைச்சர் த.மோ. அன்பரசன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச. அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ஆர். அழகுமீனா, மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் ந. அருள், துணை இயக்குநர் பாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெயர் மாற்றம்

JAMUNA, கணவர் பெயர்: A.M.David, பிறந்த தேதி: 06.06.1965, எண்.4/11, சமையபுரம் நகர், 5வது குறுக்கு தெரு, கரம்பாக்கம், போரூர், சென்னை-600 116 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி JEMIMAH DAVID, என்று அழைக்கபடுகிறேன்.

JAMUNA

துணை நீதிபதி நீதிமன்றம் ஆலந்தூர்

O.S.No.132 of 2023

பஞ்சாப் நேஷனல் வங்கி, அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/மேலாளர் 1 & 2, பாலையா கார்டன், மடிப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு-600091 ....வாதி

-எதிராக-

M/s ஃப்ரண்ட்ஸ் டிஃபின் & கூல் பார் உரிமையாளர் பாக்கியராஜ் தேவராஜன் எண்.10, பெரியார் நகர், 10வது தெரு, மடிப்பாக்கம், சென்னை-91 குடியிருப்பு முகவரி, எண்.48/3, மண்ணடியம்மன் கோயில் தெரு, மடிப்பாக்கம், சென்னை-600091 ....பிரதிவாதி

அறிவிப்பு

M/s.பஞ்சாப் நேஷனல் வங்கி, 1 & 2, பாலையா கார்டன், மடிப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600091 மேற் குறிப்பிட்ட **O.S.எண்.132/2023-ஐ துணை நீதிபதி நிதிமன்றம், ஆலந்தூர்** முன்னிலையில் தாக்கல் செய்ததை அடுத்து 10.07.2024 அன்று விசாரணைக்கு வந்து என்பதை கவனத்தில் கொள்ளவும். மாண்புமிகு தீர்ப்பாயம் இந்த O.S-ல் நீங்கள் 10.09.2024 **அன்று** ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

ஆகவே **துணை நீதிபதி நீதிமன்றம், ஆலந்தூர்** முன்னிலையில் 10.09.2024 **அன்று காலை 10.30 மணிக்கு** நீங்கள் நேரிலோ அல்லது முறையான அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு வழக்கறிஞர் அல்லது பிரதிநிதி மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறினால் நீங்கள் இல்லாமலே வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

Mrs.லிடியா ஜாஸ்மின் செல்லதுரை
மனுதாரரின் வழக்கறிஞர்
அலுவலகம்: எண்.5/26G-1, இரண்டாவது செவன் வெல்ஸ் தெரு, பரங்கிமலை, சென்னை-600 016, செல்: 99625 80083

BEFORE THE LD. FAST TRACK COURT- IV, GEORGE TOWN, CHENNAI
STC/PC 1985/2023

Mr. R. K. Gupta, Proprietor
M/s. ' Gupta Steel Suppliers'
No. SP – 49, Ambattur Industrial Estate, 3rd Main Road, 8th Street, 1st Floor, Near Telephone Exchange, Chennai – 600 058.
...Complainant

Vs.

1.Ignatius Steel Private Limited
CIN No. U45309TN2022PTC155904
No.60, Brindhavan Garden Main Road, Ponniammam Medu, Chennai – 600 110
2.Ms. Sharmila Esther
Director, Ignatius Steel Private Limited,
No.60, Brindhavan Garden Main Road, Ponniammam Medu, Chennai – 600 110
3. Mr. Leonard Fernando
Director, Ignatius Steel Private Limited,
No.60, Brindhavan Garden Main Road, Ponniammam Medu, Chennai-600 110
... Accused

PLEASE TAKE NOTICE that the Complainant above-named has filed a complaint, STC/PC 1985/2023 under Section 138 of Negotiable Instruments Act, 1881 against the 1st to the 3rd of you, namely, Ignatiussteel Private Limited and its two directors (Accused Nos. 1 to 3). The Ld. FTC Court vide order dated **06.07.2024** has directed service of summons to Accused Nos. 1 to 3 in the said complaint by substituted means. Hence, this publication.

The Accused Nos. 1 to 3 above are hereby called upon to enter appearance either in person or through Counsel, duly authorized, **on 01.08.2024 at 10.30 a.m** failing which the matter will be decided in your absence.

K.F.Manavalan & Bijesh Thomas
Counsel for Complainant
Chennai
16.07.2024

மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

MOTILAL OSWAL HOME LOANS

பதிவு அலுவலகம்: மோதிலால் ஓஸ்வால் டவர், ரஹிமுதுல்லா சயானி ரோடு, பரேல் எஸ்டி டெப்போ எதிரில், பிரபாதேவி, மும்பை—400025 CS : 8291889898
Website: www.motilaloswalhf.com, Email: hfquery@motilaloswal.com

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையாசொத்து/சொத்துகள்)

(கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002 விதி 8 (1) இன் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் அங்கீகரிக்கப்பட்ட (முன்னர் ஆஸ்பயர் ஹோம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என அழைக்கப்பட்டது) அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப நோட்டீசில் குறிப்பிட்டுள்ளபடி, செலுத்த வேண்டிய தொகை மேலும் வட்டியை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13 உப பிரிவு 4ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியில் சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன் கணக்கு எண்./ கடன்தாரர்/உடன் கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் நிலுவைத் தொகை	சுவாதீனத் தேதி	அடமானச் சொத்து குறித்த விவரம்
LXAVA00119- 200073054 எம் அண்ணாதுரை மூங்கிலன் & ரமணி ஏ அண்ணாதுரை	29-11-2021 ரூ.1647650/–	12-07-2024	பழைய எஸ் எண்.192/1பி & 192/1 & புதிய எஸ் எண்.192/1பி2 &192/2பி, பட்டா எண்.489, ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர், பி எண்.11, ஸ்ரீனிவாசபுரம், காஞ்சிபுரம், யுரேனஸ் அபார்ட்மெண்ட் மற்றும் கோகுராஜ் பிளாட், ஸ்ரீபெரும்புதூர், சென்னை, தமிழ்நாடு 600122

கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

இடம்: தமிழ்நாடு
தேதி : 16.07.2024
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மோதிலால் ஓஸ்வால் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

*மொழிபெயர்ப்பில் முரண்பட்டால், ஆங்கிலப் பதிப்பே மேலோங்கும்.

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் (ஈடுபெற்ற மற்றும் ஈடுபெறாத கடன் வணிகப் பிரிவு)

(முத்தூட் பாப்பச்சன் குழும நிறுவனம்) CIN : U65929KL1997PLC011518
நிர்வாக அலுவலகம்: 710A & 711A, 7வது தளம், பேஸ் 2, ஸ்பென்சர் பிளாசா, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 600002
பதிவு அலுவலகம்: முத்தூட் சென்டர், டிசி எண் 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம், கேரளா 695 001

muthoot FINCORP Jab zindagi badalni ho

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (2) ன் கீழ் அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (12) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ், கீழ்க்கையொப்பமிட்டுள்ள முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்டின் (MFL) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு டிமாண்ட் நோட்டீஸ்களை அனுப்பி மற்றும் உங்களுக்கு மாற்று சேவை மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பினை வெளியிட்டு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். கடனை திரும்ப செலுத்துவதற்காக மேற்சொன்ன கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோர் கீழ்க்கண்ட ஈடு பெற்ற ஆஸ்திகளை எம்எப்எல் வசம் அடமானமாக வைத்துள்ளனர்.

வ. எண்	கடன்தாரர்/ உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி என்பிஏ தேதி	செலுத்த வேண்டிய மொத்த தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள்/அசையா சொத்துக்கள் விவரம்
1.	(கடன் கணக்கு எண்.MFLTAMSEC UL000005022345) பாலசுப்ரமணியம் MK (கடன்தாரர்), வாணிஸ்ரீ MK (உடன் கடன்தாரர்) இருவரது வசிப்பிடம்: சொத்து முகவரி: பழைய எஸ். எண்: 62/5 பகுதி, புதிய எஸ். எண். 62/25, சூரப்பூண்டி கிராமம், பழைய எஸ். எண்: 62/5 பகுதி, புதிய எஸ். எண். 62/25, சூரப்பூண்டி கிராமம், செங்கை அண்ணாமாவட்டம் 601201, தமிழ்நாடு	09.07.2024 04.07.2024	09/07/2024 அன்று ரூ.27,88,404.61	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நிலம் மற்றும் கட்டிடம். திருவள்ளூர் பதிவு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சார் பதிவு தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, சூரப்பூண்டி கிராமம், பழைய சர்வே எண்.62/5 பகுதி, புதிய சர்வே எண்.62/25ல் உள்ள காலி நிலம் 120 சதுர மீட்டர். எல்லைகள் : வடக்கு : மனை சர்வே எண் 62/5, தெற்கு: மனை சர்வே எண் 62/5, கிழக்கு: சாலை மற்றும் மனை சர்வே எண் 62/5, மேற்கு: மனை சர்வே எண் 62/1. விஸ்தீரணம் : வடக்கிலிருந்து தெற்காக: கிழக்குப் பக்கத்தில் : 8 மீட்டர், மேற்குப் பக்கத்தில்: 8 மீட்டர், கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் :15 மீட்டர், தெற்குப் பக்கம்: 15 மீட்டர் மொத்தம் 120 சதுர மீட்டர். இந்த சொத்தானது திருவள்ளூர் பதிவு மாவட்டம், கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

மேற்சொன்ன கடன்தாரர்கள் எம்எப்எல்–க்கு தொகையை செலுத்த தவறினால், சட்டப்பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது நடவடிக்கையை எம்எப்எல் மேற்கொள்ளும். அதற்காக ஏற்படும் செலவுகள் மற்றும் விளைவுகள் கடன்தாரர்களையே சாரும். மேற்சொன்ன கடன்தாரர், உடன்கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் SARFAESI சட்டத்தின் பிரிவு 13ன் துணைப்பிரிவு (13) விதியின் கீழ் எம்எப்எல் முன் அனுமதியின்றி, மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல், குத்தகைக்கு விடுதல் போன்ற மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

இடம்: திருவள்ளூர்
தேதி: 16.07.2024
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்டுக்காக

சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்

பதிவு அலுவலகம்: எப்1 சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை, தமிழ்நாடு– 600 117.
Tel. No. - 044-29871174, Email Id - cs@shilindore.com , CIN - U55209TN2018PLC122598, Website:www.shilindore.com

30 ஜூன் 2024–ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

வ. எண்	விவரங்கள்	30.06.2024ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30.06.2023ல் முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	31.03.2024 முடிந்த ஆண்டு (தணிக்கை யானது)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்)	2420.60	2274.08	9669.77
2	காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	247.27	165.36	933.33
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	247.24	165.36	933.33
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	163.01	(107.50)	718.41
5	காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	157.14	(118.84)	694.92
6	சமபங்கு மூலதனம்	304.66	304.66	304.66
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.			
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)			
	அடிப்படை	5.35	(3.53)	23.58
	டைலூடட்	5.35	(3.53)	23.58

குறிப்பு

அ. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் (www.shilindore.com)ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்டுக்காக
இடம்: இந்தூர்
தேதி: 15 ஜூலை 2024
ஒப்பம்/–
T.N. உன்னி, சேர்மன்

Home First Finance Company India Limited

homefirst We'll take you home

CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

இணைப்பு–IV–A [விதி 8 (6)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர்(கள்) மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் காலம் (ii)ன்படி, ஈடுபெற்ற கடன்தாரரிடம் அடமானம் வைக்கப்பட்ட காலம் (iii)ல் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவை தொகை மற்றும் வட்டியை திரும்ப பெற அவை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது மற்றும் அதேசமயம் நிலுவை தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதன் விளைவாக, மேற்சொன்ன சட்டப்பிரிவு13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கையொப்பமிட்டவர் மேற்சொன்ன சொத்தை விற்பனை செய்வதன் மூலம் நிலுவையை தொகையை பெறலாம் என திட்டமிட்டுள்ளார். மேலும் இது இங்கு விவரிக்கப்பட்டுள்ளபடி "எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு காலம்(i)ல் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்களிடமிருந்து திரும்ப பெற "ஆன்லைன்" மூலம் ஏலம் விடப்படும்.

வ. எண்.	கடன்தாரர்(கள்) மற்றும் உடன்கடன்தாரர்கள் பெயர்	சொத்து விவரங்கள்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தொகை	சுவாதீனத் தேதி	சந்தை மதிப்பு	இஎம்டி தொகை (ரூ.)	மின்னணு ஏலத்தேதி மற்றும் நேரம்	இஎம்டி மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம்	அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண்
1	செந்தில் முருகன் ஆர், சத்யா எஸ்	மனை எண்.416, வடக்கு போர்ஷன், ஐடியல் ஹோம் காலனி, பழைய சர்வே எண்.271/1ஏ1பி, ச.எண்.271/56, DTCP அங்கீகார எண்.981/91, கூடபாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 600 124	04.04.2024	10,90,132	10.06.2024	7,42,500	74,250	31.07.2024 (காலை 11.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை)	29.07.2024 (மாலை 5.00 மணி வரை)	9940680430

மின்னணு ஏல சேவை அளிப்பவர்	மின்னணு ஏல இணையதளம்/ விவரங்கள், இதர விதி மற்றும் நிபந்தனைகள்	இஎம்டி/இதர தொகையை டெபாசிட் செய்ய கணக்கு எண்.	கிளை IFSC Code	பயனாளி பெயர்
நிறுவனத்தின் பெயர்: இ–ப்ரோகியூர்மெண்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் (Auction Tiger). ஹெல்ப் லைன் எண்: 079–35022160 / 149 / 182 தொடர்பு நபர்: ராம் சர்மா – 8000023297 மின்னஞ்சல் ஐடி: ramprasad@auctiontiger.net மற்றும் support@auctiontiger.net	http://www.homefirstindia.com https://homefirst.auctiontiger.net	912020036268117– ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆக்சிஸ் வங்கி லிமிடெட், எம்ஐடிசி, அந்தேரி கிழக்கு	UTIB0000395	அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

ஏல அதிகரிப்பு தொகை – ரூ. 10,000/–. வெப் போர்டல் (https://homefirst.auctiontiger.net) வழங்கப்பட்ட மின்னணு ஏல தளத்தின் மூலம் கீழ்க்கையொப்பமிடப்பட்டவரால் விற்பனை செய்யப்படும். ஆன்லைன் மின்னணு ஏல படிவம், அறிவிப்பு, ஆன்லைன் ஏல விற்பனையின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்னணு ஏல டெண்டர் ஆவணம் போர்ட்டல் தளத்தில் கிடைக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த அளவில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கமும் இல்லை. எவ்வாறாயினும், ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர், சொத்துக்கள்/ஏலத்தில் வைக்கப்பட்ட உரிமைகள்/உரிமை கோரல்கள்/ நிலுவை தொகைகள்/சொத்துக்களைப் பாதிப்பது குறித்து ஏலதாரர்கள் தங்களது சொந்த சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஹோம் பர்ஸ்ட்டின் எந்தவித பொறுப்பையும் மற்றும் பிரதிநிதித்துவத்தையும் மின்னணு ஏல விளம்பரம் அமைக்காது. ஹோம் பர்ஸ்ட்–டிற்கு அறியப்பட்ட அல்லது தெரியாத, தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் உள்ள அனைத்து வில்லங்கங்களுடன் இந்த சொத்து விற்கப்படுகிறது. எந்தவொரு மூன்றாம் தரப்பு உரிமை கோரல்கள்/உரிமைகள்/ நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/ ஈடுபெற்ற கடன் அளித்தவர் எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள். 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட விதிகள்/நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை இருக்கும்.

சர்பாசி சட்டம், 2002ன் கீழ் சட்டப்பூர்வ 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்/உத்தரவாததாரர்கள் மின்னணு ஏல தேதிக்கு முன்னதாக டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் துணை செலவினங்களை செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறார்கள், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் சொத்து ஏலம் விடப்படும்/விற்கப்படும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் மீட்டெடுக்கப்படும்.

தேதி: 16.07.2024
இடம்: சென்னை
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்